
பாடம் 7

களிமண் ஜாடி

வேதாகமத்தில் களிமண்கொண்டு பாத்திரங் களைப்படைத்த ஒரு மனிதனைப்பற்றிக் கூறப்பட்டுள்ளது. என்னவெனப் பார்ப்போமா?

எரேமியா தீர்க்கதரிசியை தேவன் ஒருநாள் ஒரு குயவன் வீட்டிற்குச்செல்லுமாறு, சொன் னார். அவ்வாறே எரேமியாவும் ஒரு குயவனுடைய வீட்டிற்குச் சென்றார். அங்கே அந்தக் குயவன் மண்பாண்டங்களைச் செய்வதற்கு ஆயத்தமாகிக் கொண்டிருந்தான்.

எரேமியாஅக்குயவன் செய்வதை மிக ஆர்வமாகக் கவ னிக்க ஆரம்பித்தார். அக்குய வன் ஈரமான களிமண் குவிய லில் ஓரளவுக்குக் கையில் எடுத் தான். பின்னர் அந்தக் களி மண்ணை மண்பானை செய்யும் திரிகையில் நடுவில் வைத்தான். தனது ஆடைகளை முழங்கால் வரையிலும் நன்றாகச் சுருட்டிவைத்துக் கொண்டான். இப்போது திரிகையைச் சுழல விட்டான். திரிகையில் களிமண் சுழலும் காட்சி பார்க்க அழகாக இருந்தது.



மாற்றிமாற்றி அக்களிமண் பிசையப்பட்டதால் அம்மண் மிகவும் மிருதுவாயிற்று. அவ் வப்போது தனது கைகளைத் தண்ணீரில் நனைத்துக் கொண் டான். பிசைந்த அக்களிமண்ணை அப்படியும் இப்படியுமாகத் தட் டினான். பின்னர் தான் விரும் பிய பல்வகையான மண்பாத் திரங்களைச் செய்ய ஆரம்பித் தான். ஜாடிகள் செய்தான். பெரிய பானைகள் செய்தான்.

அவ்வாறு குயவன் மண் பாத்திரங்களைசெய்து கொண் டிருக்கும்போதே அவற்றுள் சில நன்றாக வடிவமைக்கப்படாமல் சரியில்லாமல் போயிற்று; உடனே அக்குயவன் அதைத் தட்டியும், மண்ணை மீண்டும் பிசைந்தும் திரிகையில் சுழல விட்டும் கோணலானவற்றைச் சரிசெய்தான்.

அவ்வாறு அக்குயவன் மீண்டும் வேறுபாண்டமாக வனைந்தபோது, மண்பாண்டம் அழகாக உருவானது.

மனன வசனம்

கர்த்தாவே நீர் எங்களுடைய பிதா; நாங்கள் களிமண்;
... நாங்கள் அனைவரும் உமது கரத்தின் கிரியை.
ஏசாயா 64:8.

எரேமியா தீர்க்கதரிசி மிகவும் உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருந்தார்.

மிகவும் கவனமாகவும் அக்கறையாகவும் நேர்த்தியாகவும் அக்குயவன் மண்பாத்திரங்களை வனைந்து கொண்டிருந்தார். அவ்வழியே செல்வோர் எரேமியா தீர்க்கதரிசியைப் போலவே இவ்வாறு அக்குயவனின் வேலையை ரசித்தவாறு சென்றனர்.

மண்பாண்டம் விரும்பி வாங்கும் பலர் வந்தனர்; அவரவருக்குத் தேவையான மண்பாண்டங்களை வாங்கிச் சென்றனர். பெரிய மண்பானைகளைச் சிலர் வாங்கினர். சிலர் சிறிய ஜாடிகளை வாங்கினர்.

குயவன் அவ்வாறு மண்பாண்டங்களை வனையும் போது, சில பாத்திரங்களின் வாய், கோணலாயிற்று; அப்போது அவன் அதைத் திருத்தி வனைந்தான்.

அவ்வாறு அவன் அம் மண்பாண்டத்தைத் திருத்தமாக வனைந்தபோது அப்பாண்டம் பார்வைக்கு அழகானதாகவும், பயனுள்ள பாண்டமாகவும் உருவானது.

ஆனால், அவ்வாறு அது உருவாவதற்கு குயவனின் தட்டு தலுக்கும் பிசைதலுக்கும் மீண்டும் திரிகையில் அக்குயவன் வனைவதற்கும் அவனது கையில் அடங்கியிருக்க வேண்டியதாயிருந்தது.

எரேமியா தீர்க்கதரிசிக்கு தேவன் தன்னை ஏன் அங்கு அனுப்பினார் என்பதற்கான காரணம் இப்போது நன்கு புரிந்தது.

தேவன் நம்மை உருவாக்கும் ஒரு குயவன். நாம் அவருடைய கையிலுள்ள களிமண். நம் ஒவ்வொருவரையும் சிறந்த ஒரு மனிதராக உருவாக்க தேவன் ஆவலாக இருக்கிறார். நம்மில்



செய்தி

தேவன் என்னை அவருடைய கைகளுக்குள்ளாக வைத்து என்னை உருவாக்குகிறார்.

காணப்படும் சிறிய பெரிய குறைகளை தேவன் நம்மில் நீக்கினால்தான் நாம் சிறப்பானவர்களாக விளங்கமுடியும்.


எண்ணை, தண்ணீர், மாவு வைக்க, உணவு சமைக்க என்று அக்குயவன் செய்த பாத்திரங்கள் ஏராளமான காரியங்களுக்கு உதவியாக இருந்தன.

கண்ணே, தேவன் நமக்கு எரேமியா மூலமாக உணர்த்த விரும்புவது என்னதெரியுமா?

தேவனுடைய கைளுக்குள் நாம் அடங்கியிருந்து அவர் சித்தப்படி நடக்க ஆயத்தமாயிருக்க வேண்டும். அப்படியானால், நாம் தேவனுக்கும் பிறருக்கும் மகிழ்ச்சியைத் தருபவர்களாக வாழமுடியும். சிறப்பாகவும் திகழலாம்.

செய்முறை:

குயவன் களிமண்ணினால் ஒரு பானையை வனைவதுபோல தேவன் நம்மை வனைகிறார். ஓர் உன்னத நோக்கத்திற்காக அவர் நம்மை சிறப்பானவர்களாக வனைகிறார். கீழே வரையப்பட்டுள்ள பானையை முழுவதுமாக வரைந்து வண்ணந் தீட்டுங்கள்.



புதிர்